Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 19 ஈரோடு 13-10-1945 புரட்டாசி மீ 27௳ மலர் 1

# தன்மானத் தீயைப் பரப்புவோம்!

MERULAND

## தோழர் டி. சண்முகம் அவர்களின் வீரவுரை

[திருச்சி, புத்தூர் மைதானத்தில், 30-9-45ல் நடைபெற்ற 4-வது மாகாண சுயமரியாதை மாநாட்டில் தலைமைதாங்கிய செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் தோழர் திருவொற்றியூர் சண்முகம் அவர்களின் தலைமைப் பேருரை:]

மாண்புமிக்க தலைவர் பெரியார் அவர்களே! அறிவிற்சிறந்த வரவேற்புக் கழகத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய தோழர்களே, தாய்மார்களே!

கடந்த 20 ஆண்டுகளாக, திராவிடநாட்டை ஆரிய மாய்கையினின்று விடுவிக்க இரவு பகலாக இடையறாமல் பாடுபட்டுவரும் பெரியார் அவர்கள் தோற்றுவித்த திராவிடத்தின் மாபெரும் தன்மான இயக்கமாகிய சுயமரியாதை இயக்கத்தின் இந்த4வது மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் வாய்ப்பினை எனக்களித்தமைக்காக என் நன்றியறிதலை முதலில் உங்களனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டுக்குப்பின் சுமார் 13-ஆண்டுகள் கழித்து இங்கு மீண்டும் நாம் அனைவரும் ஓரே பந்தலில் கூடியிருக்கிறோம். அன்று கண்ட முகங்களில் சிலவற்றைஇன்றுஇங்கே காணமுடியவில்லை எனினும் பல்லாயிரக் கணக்கான புதிய முகங்களை, ஆற்றலும் ஆர்வமும் அறிவும் நிரம்பிய இளைஞர்களை இன்று நம்மிடையே காண்பதில் நான் மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றேன்.

அன்பார்ந்த தோழர்களே! இன்றைய நம்நாடு எந்நிலையில் உள்ளது என்பதை நன்கறிந்துள்ள உங்களிடை அது குறித்து விவரித்துக்கூறிக் காலத்தைப் பாழாக்க நான் விரும்பவில்லை. திராவிடர்களில் படித்தவர்கள் 100க்கு 4பேர்கூட இல்லை. படித்தவர்களென்று கூறிக்கொள்ளும் அந்த 4பேரின் நிலையோ பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறதென்றால், பாமரரின் நிலைபற்றியவிளக்கம் தேலைவயில்லை அன்றோ? நம்முட் படித்தவர்கள் என்போரும், பண்டிதர்கள் என்போரும் அசட்டுவாதம் பேசி, ஆரியத்தின்முன் ஆமைகள் போல் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றனர்; நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்திச் சுற்றிவந்து முணமுணக்கின்றனர். சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி என்கின்றனர்; ஆரியரின் சாண் வயிற்றை நிரப்புவதற்கு வழிகோலும் சதிக்கிடங்குகளைக் கோயில் என்கின்றனர்; மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசும் ஆரியக் கதைகளைப் புனித ஞானம் புகட்டும் புண்ணிய நூல்கள் என்று போற்றுகின்றனர். மூடப்பழக்க வழக்கங்கள் ஏதென்றால் முட்ட வரும் மாடுகள் போல் ஆகிவிடுகின்றனர். பிறர் பொருளை நோகாமல் வெள்ளம்போல் அள்ளி விழுங்கும் மனிதரை உயர்ந்தோரென்கின்றனர்; உழைக்காமல், உடல் அசையாமல் வாழ்க்கையை நடத்தும் வஞ்சகர்களை உயர்வான சாமி என்கின்றனர்; அழியாத மூடத்தனத்தை ஏட்டில் அழகாய் வரைந்துள்ள பழிகாரர்களை முழுதாய்ந்த மூதறிஞர்-பாவலர் என்றெல்லாம் புகழ்கின்றனர். படித்தவரென்போரின் நிலையே இதுவானால், படித்தவர்கள் என்போரே சமயச் சின்னங்களையும், அறிவைபழிக்கும் ஆரியக் கதைகளையும், அவற்றில் கூறப்படும் ஆபாசக் கடவுள்களையும், அவற்றிற்காகக் கட்டி வைக்கப்பட்டிருக்கும் கோவில்களையும் நம்பி அறியாமை இருளில் மூழ்கிக்கிடப்பதென்றால், படிப்பற்ற பாமர மக்கள் ஆரியத்தின் மீளா அடிமைகளாகி, மூடராகி, ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் அற்றவர்களாகக் கிடப்பதில் ஆச்சரியமில்லையல்லவா?

இதன் பயன் என்னாயிற்று? ஆரியம் கொள்ளை நோய்போல, திராவிடத்தில் கால்கொண்டு, மக்கள் மனதைப்பற்றிப் பிடித்து, கருத்தையழித்து, வீரரைக் கோழையாக்கி, வீணரை வாழவைத்தது. திராவிட மக்கள் தங்கள் வறுமையை அகற்றும் வழிதெரியாமல் தவிக்கலாயினர். பாட்டாளி மக்கள் உழைத்துழைத்து அலுத்தனரே ஒழிய முன்னேறும் வழிகாண முடியவில்லை. வற்றாத ஆறுகள் மூலம் நீர்வளமிருந்தும், நஞ்சை புஞ்சைகள் நாடெங்கும் மிகுந்து

—யவையும் கஷ்டப்பட்டு உழைத்து, தாங்கிக்

கிடப்பதன் மூலம் நிலவளமிருந்தும் முத்தும் பவளமும், கடலடியிலும், தங்கமும் வைர வைடூரியங்களும் நிலத்தடியிலு மிருப்பதன் மூலம் இயற்கைவளம் மிகுதியாயிருந்தும், இவற்றில் பாடுபட்டுப் பயன் காண உடல் உறுதியிருந்தும் மனஉறுதி இல்லாமற் போயினமையால்; எறும்புகள் புற்றெடுக்க, பாம்புகள் குடிபுகுவது போன்று பாடுபட்டுப் பலன் விளைவிக்கும் மக்கள், பலனை அனுபவிக்கமுடியாமல் அவற்றைப் பிறர் அனுபவிப்பதும், அதே சமயத்தில் பாடுபட்டுழைத்த பாட்டாளிமக்கள் கூலிகளாய், பஞ்சைகளாய் வறுமைநோய் களைய வழிகாணாதவர்களாய்க் கடல்கடந்து பிறநாடு சென்று அல்லலுறுவதுமாக இன்றைய நம் திராவிட மக்கள் நிலைமை அமைந்து கிடக்கிறது. வளமிக்க இந்நாட்டு மக்கள் மனவளம் பெற்றிராமையால், தங்கள் இழி நிலைமையின் உண்மைக் காரணத்தை உணரமுடியாமல் எல்லாம் தங்கள் தலைவிதி என்றும் அன்றெழுதிய ஈசன் அழித்தெழுதப் போவதில்லையென்றும், தங்கள் கர்ம பலனைத் தாங்களே அனுபவித்துத்தீர வேண்டுமென்றும் மூடத்தத்துவங்களைக் கூறிக்கொண்டு, அதன் பலனாக மீளா வறுமையில் சிக்கித் தவித்து மீளும் வகையறியாமல் மாளுகின்றனர். விதியையும், தலையெழுத்தையும், கர்மபலனையும் சுட்டுப் பொசுக்கி தங்கள் மனஉறுதியைப் பெற்றால் மட்டுமே தாங்கள் உயர்வடைய முடியும் என்பதை,இன்று தொழிற்சாலைகளில் முதலாளிகளுடன் போரிட்டுத் தங்கள் நலன்களைப் பெருக்கிக்கொள்ள முயலும் தோழர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உரிமை கோரும் அதே தொழிலாளி உரிமைக்காகப் போராடும் அதே பாட்டாளி, தலைவிதியையும் கர்மபலனையும் உதறித் தள்ளிப் போராடினால் சிறந்தவாழ்வு பெற முடியும் என்பதைப் பிறநாடுகளிலிருந்து தெரிந்துகொண்ட அதே உழைப்பாளி, சமுதாய அரசியல் விஷயங்களில், தலைவிதி, கர்மவினை என்றெல்லாம் கூறி தம்மை அடிமைப்படுத்தும் ஆரியத்துக்குத் தலைசாய்த்துவிடுகின்றனர்; அந்த ஆரியத்தினால் தாங்கள் மீளாத் துயரங்களில் ஆழ்ந்து கிடந்து விடுதலை பெற வழியற்றுக் கிடப்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சிந்திப்பதுமில்லை. தங்களுக்குக் கேடு சூழ்விப்பது ஆரியமே என்பதை உணர்வதில்லை.

வீரமரபில் தோன்றிய திராவிடர், தனிப்பழம் பெருமையுடன் மிளிர்ந்த திராவிடர், இலங்கையிலும், பர்மாவிலும், இமயத்திலும் தங்கள் வீரத்தை நிலைநாட்டிய திராவிடர், மேல் நாடுகளுடன் வாணிபம் நடாத்திய திராவிடர், பரணிபாடி தரணியாண்ட திராவிடர் இன்று இவ்வித இழிநிலையடைக் காரணம் என்ன? ஆரியம்! ஆரியமே அல்லவா?

"ஆரியர்கள் முரட்டுத்தன்மையுள்ள துப்புரவற்ற மிலேச்சராய் *காட்டு விலங்குகளின் தோல்களை உடையாக உடுத்தி, உலோகத்தைப் பயன்படுத்தத் தெரியாமல்" ‡ மாடு, பன்றி ஆகியவற்றின் இறைச்சிகளை உண்டு, மது வருந்தி, யாகங்கள் நடத்தி தெய்வங்களுக்குப் பலியிட்டு, விபசாரத்தைப் புகுத்தி † மெல்ல மெல்ல அரசரையடுத்து § பாங்கராயமர்ந்து தவவேடம் பூண்டு தம்மைப் பிறர் முனிவராகக் கருதுமாறு நடந்து, தமிழ் கற்று தமிழர் மனங் கவர்ந்து தங்களைத் தேவர் என்றும், பூசுரர் என்றும் தற்புகழ்ச்சி கூறி, மதத் தலைவர்களாகி, தமிழ் மொழியைத் தளர்த்தத் தொடங்கி, நம்நாட்டு மக்களைப் பல்வகைச் சாதியினராகப் பிரித்து, பிறப்பால் உயர்வுதாழ்வு கற்பித்துப் பிரித்தாட்சி செய்து வடநாட்டாரை உயர்த்தி, திராவிடரைத் தாழ்த்தி, 2000 ஆண்டுக் காலத்திற்குள் திராவிடநாட்டின் மதவிபலையும் மற்றும் 2000 ஆண்டுக் காலத்திற்குள் திராவிடநாட்டின் அரசியலையும் கைப்பற்றிக்கொண்டு, விரலாற் சுட்டி எண்ணக்கூடிய ஒரு சிறு கூட்டம் ஒரு மாபெரும் நாட்டை வல்லக்காரத்தால் கைப்பற்றலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தனர். இன்னும் அவர்கள் நம் நாட்டு ஆட்சி பீடத்திலும், சமயசமுதாயத் தலைமைப் பீடத்திலும் அமர்ந்து நம்மவர்களை அடிமைகளாய் நடத்துகின்றனர்.

இந்த இழிநிலையைப் போக்கவே, திராவிட மக்கள் மனத்திலே பதிந்துகிடக்கும் மாசுதனைத் துடைக்கவே, ஆரிய ஆட்சியின் அட்டூழியத்தை ஒழிக்கவே, பெரியார் முனைந்து திக்கெட்டும் தன்மானத் தீயைப் பரவச்செய்தார்; நாட்டுப் பிரிவினை, இன எழுச்சி, பாட்டாளிகள் துயரம் துடைத்தல், புராணப் பொய்களைப் பொசுக்கல், ஆரிய அகந்தையை அழித்தல், அறியாமை இருள் ஒழித்து அறிவு ஒளி பரப்புதல், திராவிடத் தனிப் பழம் பெருமையை நிலைநாட்டல் முதலியவற்றைத் தம் கொள்கையாகக் கொண்டு இடையறாது உழைத்தார்; தம் முதிர்ந்த பருவத்தையும் தளர்ந்த உடலையும் பொருட்படுத்தாமல் அலுப்படையாமல், எதிர்ப்புக் கஞ்சாமல், இளஞ்சிங்கம் போன்று இன்னும் உழைத்து இளைஞர்களைத் தட்டியெழுப்பி களத்தின் முன்னணியில் நிறுத்தி, தலைமை தாங்கிப் போர் நடத்திவருகிறார். பெரியாரின் உழைப்பும், தீவிர முயற்சியும், பயன்கருதாத் தொண்டுமே இன்று நம்மனைவரையும் இங்குக் கூட்டுவித்து, நாம் செய்யவேண்டிய கடமையை உணர்ந்து பணியாற்ற நம்மைத் தூண்டியிருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இத்தனை ஆர்வத்துடனும், உணர்ச்சியுடனும் எத்தகைய தொண்டிற்கும் தியாகத்திற்கும் தயார் என நாட்டின் நானா மூலைகளிலிருந்து இங்கு வந்து குழுமியிருப்பது இன எழுச்சியின் உணர்ச்சியினாலேதான். இன எழுச்சிதான் தனித் திராவிடம் காண இளைஞர் உள்ளத்தைத் துடிக்க வைக்கிறது; இன எழுச்சிதான் பகுத்தறிவை, சிந்தனா சக்தியை, நாட்டுப்பற்றைக் கிளப்புகிறது. "கொடுவாளினை எடடா கொடியோர்செயலறவே"

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

* ஆரியர் மிலேச்சர்-திவாகரச் சூத்திரம்

‡ Otto Schrader

† Sri Brahmanandagiri Swamiji

§ பாங்கர்→தலைவர்க்கு ஏவல் செய்து தலைவரை மனைவி, பரத்தை எனும் இருவகை மகளிரொடும் கூட்டுபவன்.

ரோஜா முத்தையா

# நாடு உயிரினும் பெரிது!

## தோழர் டி. பி. வேதாசலம் அவர்களின் வரவேற்புரை

[திருச்சியில் 29-9-45 அன்று நடைபெற்ற 17வது திராவிடர் கழக மாகாண மாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் பி.ஏ., அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை]

பெரியாரவர்களே! பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே!

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில், மாநாட்டின் வரவேற்புக் கழகத்தாரின் சார்பாகத் தங்களனைவரையும் வரவேற்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். கொந்தளிப்பான சமயத்தில், யுத்த பிற்கால நாட்களில் வசிக்கும் நமக்கு, மிக நம்பிக்கையான கட்டம் வந்திருக்கின்றது. திராவிடரின் அறிவுத்திறன், மக்களின் ஆதரவைப் பெற்று, புது முயற்சியில் சரித்திரத்தை அமைக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

### இந்திய அரசியல் வரலாறு

பிளாசி சண்டை நடந்து சரியாக 100 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற, 1857-ல் ஓர் முயற்சி நடந்தது. தேசீய ஆர்வம் இல்லாமையாலும், கட்டுப்பாடு இல்லாமையாலும், அது தோல்வியடைந்தது. பார்லிமெண்டும், இராணியாரும் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர். இதிலிருந்து ஆட்சி முறையின் அடிப்படை மாறி, தயாள தர்மகர்த்தாத் தத்துவம் தொடர்ந்தது. ஆங்கிலேயர்—இந்தியர் கூட்டு முயற்சியால் 1885-ல் இந்திய தேசீய காங்கரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. லார்ட் கர்ஸானின் ஆட்சிக் கோளாறால் ஏற்பட்ட வங்கப் பிரிவினை பிரச்சினையின் மீது, முதல் அரசியல் போராட்டம், 20 ஆண்டுகளுக்குப் பிறகு விளைந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், இந்திய தேசீயமும் இரண்டு கட்சிகளாயின. இந்திய தேசீயத்தின் ஆயுதங்கள் மூன்று. 1. பொருளியல் பகிஷ்காரம். 2. சுதேசி இயக்கம். 3. தேசீயக் கல்வி. காந்தியார் காங்கரஸில் நுழைந்தவுடன் பொது மக்களின் தொடர்பு சாத்தியமாயிற்று. சுயராஜ்யம் காங்கரஸின் குறிக்கோளாயிற்று. நான்கு அம்ச திட்டம் அமைக்கப்பட்டது:

1. சட்டசபை பகிஷ்காரம்.
2. நீதிமன்ற பகிஷ்காரம்.
3. கல்லூரி, பள்ளி பகிஷ்காரம்.
4. பிரிட்டிஷ் ஆட்சி பகிஷ்காரம்.

இந்தத் திட்டம் தோல்வியடைந்ததன் விளைவாக தோழர்கள் சி. ஆர். தாசும், பண்டிதமோதிலால் நேருவும் காந்தியாரை எதிர்த்து சட்டசபைகளில் நுழைந்து வெற்றியடைந்தனர். முதல் திட்டத்தின் தோல்விக்குப் பிறகு இது காந்தியாரின் இரண்டாவது தோல்வி.

இளமை வயதிலேயே தோழர் சி. ஆர். தாஸ் காலமானார். காந்தியார் தோழர் சென் குப்தாவிற்கு மேயர், சட்டசபைத்



T. P. வேதாசலம் B. A.,

தலைவர், வங்கக் காங்கரஸ் தலைவர் என்கின்ற மும்முடிகளை யளித்து முன்னுக்குக் கொண்டுவந்தார். போஸ் சிறையிலடைக்கப்பட்டார். காந்தியார் கட்சிகளை ஏற்படுத்தி இடதுசாரியைத் தொடங்கி போஸ் அவர்களை விரட்டினார். தோழர் மோதிலால் நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்ற லாகூர் காங்கரஸ் 'பூர்ண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள்' எனத் தீர்மானித்தது. அதற்கப்புறம் தண்டியாத்திரையும், உப்பு சத்தியாக்கிரகமும் நடைபெற்றன. இலண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டிற்கு காங்கரசை அழைத்தனர். மாநாடும் முறிந்தது. விசனமடைந்த—ஆனால் அறிவுபெற்ற—காந்தியார் சட்டசபை நுழைவை அனுமதித்தார். காங்கரஸ் சட்டசபையைக் கைப்பற்றியது. ஆனால் பெருத்த எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. கீழ்க்கண்டவைகளை அவர்கள் திருப்திப்படுத்தவேண்டியதாயிற்று:

1. நேர்தல் வாக்குறுதிகள்.
2. விவசாயிகளும், தொழிலாளர்களும்.
3. முஸ்லிம் லீக்.
4. இந்து மகாசபை.
5. மன்னர்கள்.
6. தேசீயக் கொள்கைகள்.

காங்கரஸ் உள்ளுக்குள் குறைபாடுகள் உள்ளதாகி, அவை வெளிப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிறது. திலகர் நிதியின் பேரால் திரட்டப்பட்ட 130 லட்ச ரூபாய்களைக் கைபாடிய வகையில் காங்கரஸ் அரங்கத்தின் சூத்திரதாரிகளுக்கும், அதன் தலைவராம் மகாத்மாவுக்கும் நிலையான அவமானம் உண்டாகியது. ராஜ்கோட் என்ற சிறிய சமஸ்தானத்தில் காந்தியார் கண்ட பெருந்தோல்வியும், அகிம்சாவீரர்கள் இம்சை முறையை உபயோகப்படுத்தியதும், விவசாயிகளையும், தொழிலாளர்களையும் அடக்க பட்டாளங்களை உபயோகித்ததும், வேலையில்லாத் திண்டாட்டம், கல்வியின்மை, எழ்மை ஆகியவைகளை ஒழிக்கும் முயற்சியில் உற்ற தோல்வியும் காந்திய முறைகளின் பிற்போக்குத்தனத்தை நன்கு வெளியாக்குகின்றன. 1942-ல் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஜப்பானியருக்கு அழைப்பு விடுத்ததும், ஆகஸ்டு கலவரங்களும் காங்கரஸ்காரரின் கடைசியான கீழ்மைக் குணங்களேயாகும்.

திராவிடர்களின் முன்னேற்றத்திற்கு காங்கரஸ் எந்த வகையிலும் உதவாதென்பதற்காக இதுவரையிலும் காங்கரஸ் வாலாற்றிலிருந்து சில உண்மைச் சம்பவங்களை உங்களுக்கு எடுத்துக் காட்டினேன்.

### திராவிடர் இயக்கம்

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே திராவிடர்களாகிய நாம் காங்கரசிலிருந்து விலகிச்செல்ல ஆரம்பித்துவிட்டோம்.

28 ஆண்டுகளுக்கு முன்னமே தீர்க்கதரிசிகளான நம் தலைவர்களாகிய காலஞ்சென்ற டாக்டர் நாயர் அவர்களும், சர் பி. தியாகராய செட்டியார் அவர்களும், காங்கரசை எதிர்த்துப் போர்க்கொடியை உயர்த்தினர்.

ஏய்ப்போருக்குஎவலாளராகவும், ஆட்டுமந்தைகள் போலவும், திராவிடர் இருப்பதை அவர்கள் கண்டு வருந்தினர்.

ஆரியத் தளைகள் அவ்வளவு இறுக்கமாக திராவிடன் மீது பூட்டப்பட்டிருந்தன. திராவிடன் முன்னேறாத முறையில் சமயம், சமுதாயம், சட்டம், பொருளாதார அமைப்பு, பொது வாழ்வு, நாட்டு ஆட்சி முறை, உத்தியோகங்கள் ஆகியவைகள் தந்திரமாய்அமைக்கப்பட்டன. நீதிக்கட்சி மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, ஆங்கிக்

கொண்டிருந்த திராவிடர்களை, சொந்த நிலைமையை உணரும்படி செய்தது. இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியிருந்தாலும், திராவிடர் பலர், ஆவலுடன் ஆங்கிலக்கல்வி பயின்று படிப்படியே பதவிகளிலமர்ந்தனர். நீதிக் கட்சியினர் கல்வியின் அருமையை உணர்ந்து பல்கலைக் கழகங்கள் முதல் கிராமப் பள்ளிகள் வரையில் 1920லிருந்து அதிக சீர்திருத்தங்களைச்செய்தனர்.

ஆனால், சமயம், சட்டம், சமுதாய சீர்திருத்தம் ஆகிய துறைகளில், நீதிக் கட்சியின் அன்றைய தலைவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. இந்து மத பரிபாலன சட்டம் கோவில் நிர்வாகத்தை ஓரளவு பார்ப்பனரிடமிருந்து பறித்துவிட்டது. ஆனாலும் நடைமுறையில் சில சுயநலமிகள், பார்ப்பனர் தந்திரத்திற்கு அடிபணிந்தனர். சடங்கு, புரோகிதம், உள் நிர்வாகம், கோவில் வரும்படி, ஆகியவற்றில் இன்னமும் பார்ப்பன எதேச்சாதிகாரம் இருந்து வருகின்றது. வேதம், சுருதி, சுமிருதி, புராணம் ஆகியவற்றின் ஆதாரத்தைக் கொண்ட ஆரிய ஆதிக்கத்தை மக்கள் இன்னமும் அகற்றவில்லை. நம்மை முன்னோக்கியிருக்கும் பிரச்சினைகளாவன: ஒரு சில தெளிவான கொள்கைகளைக் கொண்ட சமயம், மக்களுக்குப் புரியும்படியான மொழி, சோற்றுப் படையல்களை அறவே ஒழித்தல், திருவிழாக்கள், சடங்குகள் ஒழிப்பு; கோவில், மடம் சொத்துக்களை கல்விக்குத் திருப்பிச் செலவழித்தல்; வெறும் சொல்லால் மட்டுமல்லாமல், நடைமுறையிலும், ஆசாரத்திலும் சாதியை ஒழித்தல்; நாட்டைத் தொழில் மயமாக்குவது; சாதியற்ற, வர்க்கமற்ற சமுதாயத்தை உண்டாக்குவது; நாட்டின் செல்வமும், நிலமும் நலம் பயப்பதும், நேர்மையுள்ளதுமான முறையில் பங்கிடப்படுதல், இவையெல்லாவற்றையும்விட திராவிட சமுதாயம், சிறப்புடையதாகவும்; தனித்தியங்குவதாகவும் ஆக்கப்பட வேண்டும். திராவிடத்திலுள்ள ஒவ்வொரு திராவிட ஆணும் பெண்ணும், தான் திராவிடன், தனதுநாடு திராவிட நாடு என்ற நினைப்புடன் நினைத்தும், பழகியும் வராவிட்டால் மேற்சொன்ன கொள்கைகள் கொஞ்சமும் வெற்றி பெறமாட்டா.

(தொடர்ச்சி அடுத்தவாரம் வரும்)

## மறைவு

**5-10-45** காலை கயப்பாக்கம் ஜெமீன்தார் தோழர் முத்துவெங்கடபதி ரெட்டியார் 77-வது வயதில் தமது பங்களாவில் இயற்கை யெய்திய செய்தி கேட்டு வருந்து

# நடக்க இருப்பவை !

### மைசூர் பிரஜாபக்ஷா!

16-10-45 செவ்வாய்க்கிழமை காலை மைசூர் நகரில் டவுன் ஹாலுக்குப் பக்கத்தில் நடைபெறும், மைசூர் பிரஜா பக்ஷா மாநாட்டைத் தோழர் ராவ்பகதூர் என். சிவராஜ் B. A., B. L., M. L. A., அவர்கள் திறந்து வைப்பார்கள். மாஜி மந்திரிகளும் பிரபல தலைவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

### சென்னை சுயமரியாதைச் சங்கம்

16-10-45 செவ்வாய் மாலை 6-15 க்கு சென்னை பார்க் டவுன் பொம்மு செட்டித்தெரு 11 வது எண்ணுள்ள இல்லத்தில் சென்னை நகர சுயமரியாதை சங்க நிர்வாக கமிட்டி கூட்டம் நடைபெறும். புது நிர்வாகஸ்தர் தேர்தலும் சிவாஜி நாடக முடிவானஏற்பாடும் சென்னை ஜில்லா சு.ம.மாநாட்டு வரவேற்புக் கூட்டமும் நடைபெறும்.


### நன்றி

திருச்சி மாநாடுகளுக்கு வெளியூர்களிலிருந்து வந்து தொண்டாற்றிய தொண்டர் படையினருக்கும், மாணவர்களுக்கும், ரயில்வே கிளார்க்குகள், பொன்மலை திருச்சி தோழர்கள் அனைவருக்கும் "பெரியார் தொண்டர் படை" சார்பாகத் தோழர் எஸ். பிரான்ஸிஸ் நன்றி தெரிவிக்கிறார்.

---

13-7-45-ல் திருச்சியில் நடந்த தோழர்கள் ரங்கமன்னார்-சாரதாம்பாள் திருமணத்தை முன்னிட்டு நன்கொடையாக அனுப்பிய ரூ. 1 வரப்பெற்றோம்.


## தானே இயங்கும் அலாரம்
(அபாயக்குறிப்பு)
### கைத் துப்பாக்கி



திருடர்கள், கொள்ளைக்காரர்கள், துஷ்ட மிருகங்களை பயமுறுத்த உண்மையான ஆயுதம்போல் பெரிய சத்தம் உண்டாக்கும். லைசென்ஸ் தேவையில்லை. தற்காப்பு, பந்தயம், நாடகங்களுக்கு உபயோகமாகும். ஒரே தடவையில் 6-குண்டுகளைச் சுடும், நீண்ட நாள் உழைக்கும் சிறந்த உருக்கால் செய்தது. நெ. 1 விலை ரூ. 12. நெ. 2 ரூ. 10. நெ. 3 ரூ. 8. ஒவ்வொரு துப்பாக்கியுடன் 4 பாக்கட் ரவை இனாம். தபால் செலவு பிரத்தியேகம். ஒவ்வொரு ஆர்டருக்கு ஒரு டொம்மை கைக்கடிகாரம் இனாம்.

STANDARD Watch Co.,
13, Joymitter st.,
Hatkhola CALCUTTA (KR)

## இன எழுச்சிப் பாக்கள்

நவீன சினிமாப் பண்களிலே உணர்ச்சியூட்டக்கூடிய பாக்கள்.
ஆசிரியர்: திருவத்திபுரம், மாவண்ணா, தேவராசன்
விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 தபால் தலை அனுப்பவும்.
வியாபாரிகளுக்கு 100க்கு 25 கமிஷன் தரப்படும். முன்பணம் வேண்டும்.
குறிப்பு:- இந்நூலாசிரியர் எழுதிய "நல்லிசை நானூறு (0-8-0) எம்மிடம் கிடைக்கும்.
கிடைக்குமிடம்:- ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ.



## கியாதிபெற்ற S. M. S. R. B. உறையூர்

### கைத்தறி கலர் புடவைகள்

நேர்த்தியான ரகங்கள், உயர்ந்த ஜரிகைகள், உத்திரவாதமுள்ள சாயங்கள். 80, 100 நெ. நூல்களால் தயார் செய்யப்பட்டவைகள். எல்லா ஊர்களிலும் கிடைக்கும்-

புரோப்ரைட்டர்:-
S. M. S. R. பாலசுந்தரம் செட்டியார்,
சொந்த கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமி கோவில் தெருவு,
உறையூர் P. O. திருச்சி.

# பார்ப்பனப் பத்திரிகைப் பொய்ப்பிரசாரம்

## விக்கிரகம் உடைபட்டது உண்மையா?

திருச்சி, அக். 8—

"திருச்சி ஜில்லா S. I. L. F. (ஜஸ்டிஸ் கட்சிக்) கூட்டம் திருச்சி ஆஸ்பத்திரி ரோடு கௌரவ மாஜிஸ்டிரேட் தோழர் டி. வி. ஆர். கே. செட்டியார் தலைமையில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

1-10-45ல் திருச்சிக் கோட்டை ஸ்ரீ தாயுமான ஸ்வாமி கோவிலிலும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திலும் சில திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள் நுழைந்து அக்கிரமம் செய்ததை (விக்ரஹத்தை உடைத்ததை) இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இச்சம்பவங்களைப்பற்றி கீழ்க்கண்ட தகவல்கள் கிடைத்துள்ளன:—

சென்ற வாரத்தில் திருச்சியில் திராவிடக்கழக, சுயமரியாதை மகாநாடுகள் நடைபெற்ற மறுதினம் மாநாட்டுப் பிரதிநிதிகள் என்று கருதப்படும் சுமார் 40 பேர் மலைக்கோவிலைப் பார்க்கச்சென்ற போது செய்த கோவில் எதிர்ப்பு கோஷங்களைக்கண்டு கோவில் காப்பாளர் வெளிக் கதவை மூடிவிட்டனர். பூஜைக்காக குருக்கள் கோவில் கதவைத் திறந்ததும் அங்குமிங்கும் நின்று கொண்டிருந்த ஷை நபர்கள் கோவிலுக்குள் நுழைந்துவிட்டனர். கோவிலில் அச்சமயம் சிப்பந்திகள் குறைவாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. உள்கோவில்களெல்லாம் மூடியிருந்தன. இவர்கள் கோவில் எதிர்ப்புக் கோஷங்கள் செய்துகொண்டும் கலாட்டா செய்துகொண்டும் அம்மன் பிரகாரத்திற்குச் சென்று புராண கியாதி வாய்ந்த ஸ்ரீ சண்டிகேசுவரர் (பூதகணங்களுடைய சேனாதிபதியும் சிவ பக்தர்களின் வரவேற்பாளரும்) சிலா விக்ரஹத்தைப் பெயர்த்து பூமியில் எறிந்ததாயும், அதனால் விக்ரஹம் பின்னப்பட்டதென்றும் கூறப்படுகிறது. பின்னர் கலாட்டாக்காரர்கள் கோவிலை விட்டு வெளியேறினர்.

இவ்விஷயத்தைப்பற்றி கோவில்எக்ஸிகியூடிவ் ஆபீஸர் ஸ்ரீ ராமதாஸ் நாயுடு, போலீசாருக்கும், இந்து மத ஸ்தாபன தர்ம பரிபாலன போர்டாருக்கும் தகவல் அனுப்பியுள்ளார். சாஸ்திர முறைப்படி சம்ப்ரோக்ஷணை முதலியவை நடைபெற்றன"

### ஸ்ரீரங்கத்தில்

"ஸ்ரீரங்கத்தில் இதேமாதிரி ஆலய எதிர்ப்புக் கோஷங்களைச் செய்துகொண்டு ஷையார் கோஷ்டிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்குள்ள சிப்பந்திகளுக்கும் ஷையார்களுக்கும் கைகலப்பு ஏற்படும்போலிருந்தது.

போலீசாருக்குத் தகவல் அறிவித்து அவர்கள் வருவதாக யாரோ அங்குள்ள ஒருவர் சொல்லியதைக் கேட்ட உடன் ஷையார்கள் கோவிலை விட்டு வெளியேறினார்கள்"

என்று பார்ப்பனப் பத்திரிக்கைகளில் விஷமச்சேதிகள் காணப்படுகின்றன.

### விலகினார்!

அக். 10-

கும்பகோணம் திராவிடர் கழகத் தலைவர் அட்வகேட் தோழர் முத்துதனபால் அவர்கள் திருச்சி மாநாட்டின் தீர்மானத்திற்கிணங்க, தஞ்சை ஜில்லா யுத்தக் கமிட்டி, கும்பகோணம் டிவிஷனல் யுத்தக் கமிட்டி, தாலுக்கா சிப்பாய்கள் போர்டு இவைகளிலிருந்த தமது அங்கத்தினர் பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சென்ற மாதம் 13-ந் தேதியில் இருந்து அக்டோபர் மாதம் 1-ந் தேதி வரை திருச்சியில் இருந்துவிட்டு, 2-ந் தேதி ஈரோடு வந்து, 3, 4-ல் ஈரோட்டில் மாநாடு கணக்குப் பார்த்து, 5-ந் தேதி சென்னையில் 'விடுதலை'ப் பத்திரிக்கை சம்பந்தமாய் அதிகாரிகளிடம் பேசிவிட்டு, 6, 7-ந்தேதிகளில் சென்னை டாக்டர் இடம் சென்று பல் சிகிச்சை பெற்று, 8-ந் தேதி ஈரோடு புறப்பட்டு, 9-ந் தேதி ஈரோடு சேர்ந்து, 10-ந் தேதி மறுபடியும் சென்னை புறப்பட்டுவிட்டார். பின்னர்

11-ந்தேதி சென்னை சென்ட் மேரீஸ்ஹால் பொதுக்கூட்டத்தில் தோழர் அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் சொற்பொழிவு.

12- சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் "தமிழும், தமிழரும்" என்பது பற்றிய சொற்பொழிவு.

13- திருச்சிக்குப் புறப்பாடு.

14- திருச்சிமாநாடு தொண்டர் படை பாராட்டுக் கூட்டம்.

15- மதராஸ்.

16- மதராஸிலிருந்து புறப்பாடு.

17- ஈரோடு.

குறிப்பு: திருச்சி 4வது மாகாண சு. ம. மாநாட்டில் கொடியேற்றிய தோழர் கனகம்மையார் ராமசாமி அவர்களின் சொற்பொழிவும் பாட்டும் அடுத்த வாரம் வரும்.

வெற்றியடைந்தவுடன்

மே. த. கவர்னரின்

"துருப்புகளின் சகாய நிதியானது" "கஷ்ட நிவாரண சகாய நிதி"யாக மாறிவிட்டது.

இந்த மாறுதல் குறிப்பிடத்தக்கதாகவும், தேவை மிக அதிகமாகவும் இருக்கிறது.

எனவே

"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு

"ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி,

C/o இம்பீரியல் பாங்க், இந்தியா, சென்னை" என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பிக்கொடுக்கவும்.

# குடி அரசு

1945-ஞு அக்டோபர் ௴ 13௳

## தேர்தலும் ஜஸ்டிஸ் கட்சியும்

திருச்சி மாநாட்டிற்குப் பின் அம் மாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றி 30-9-45-ந் தேதி "குடி அரசி"லும், அம் மாநாட்டின் முக்கிய தீர்மானங்களைப் பற்றி 6-10-45-ந் தேதி "குடி அரசி" லும் விளக்கி இருக்கிறோம். இப்போது தேர்தலில் நம் கட்சியார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிச் சிறிது விளக்குவோம்.

பொதுவாக பொது மக்கள் ஒரு விஷயத்தை நன்றாய் விளங்கிக் கொள்ள வேண்டும். அதென்னவெனில் வழக்கம்போல் காங்கரஸ் சர்க்காரிடம் சரணாகதி அடைந்து விட்டது. அந்த சரணாகதியை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நாட்டைக்காங்கரசினிடம் ஒப்படைக்க சவுகரியமும் வாக்குறுதியும்செய்து கொடுத்துவிட்டது. இது தான் இன்றைய அரசியல் காட்சியாக இருக்கிறது.

ஏன்எனில் சர்க்காரார் காங்கரசார் பதவிக்கு வரவேண்டுமென்பதாகவே கருதுகிறார்கள். உண்மையாகவே காங்கரசார் பதவிக்கு வராமல் வேறு கட்சி பதவிக்கு வருமானால் நாட்டில் சமதர்மக் கொள்கைகள் ஆட்சிக்கு வந்துவிடும். அப்போது சர்க்கார் நிலை ஆபத்தாகப் போய்விடுவதல்லாமல் காங்கரஸ் முதலாளித் தன்மையும், பார்ப்பன முதலாளித்தன்மையும், மத முதலாளித்தன்மையும் நாசமடைந்துவிடும். இந்தக்காரணத்திற்காகவேதான்காங்கரசும்சர்க்காரும், தேர்தல்களின் போதெல்லாம் ஊடலும், ஊடலுக்குப்பின் ஏற்படும் காதலும் போல் தொடர்ந்து நாடகம் நடித்துவருகிறார்கள்.

காங்கரசார் சென்ற தேர்தலின் போது 1935ம் வருஷத்திய சீர்திருத்தச் சட்டத்தை உடைத்துவிடுவதாகக்கூறி அந்தப் பிரச்சினையின்மீது தேர்தலுக்கு நின்று நல்லதொரு வெற்றி பெற்றதும் சீர்திருத்தத்தை உடைக்காமல் இருப்பதற்கு சர்க்காரிடம் வாக்குறுதி வாங்கப்போவதாய்ப் பாசாங்குசெய்து மக்களை ஏமாற்றி "சட்டத்துக்கு விரோதமாக நடந்து சர்க்காருக்கு தொல்லைகொடுப்பதில்லை" என்று சர்க்காருக்கு வாக்குறுதி கொடுத்து சர்க்காரும் அதை ஏற்றுக்கொண்டு "அப்படியானால் உங்களை நான் வெளியில் போகும்படி செய்வதில்லை" என்று சர்க்கார் காங்கரசாருக்குச் சொல்லிப் பதவியை அளித்தார்கள். அதைத்தான் "குடிஅரசு"ம், "விடுதலை"யும், காங்கரஸ் மந்திரிசபையை "சரணாகதி மந்திரி சபைகளின் வாழ்வு இனியும் எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது?" என்று தலைப்புக் கொடுத்து நாள் கணக்கையும் போட்டுக்கொண்டு வந்தன.

காங்கரசார் சர்க்காரிடம் வாக்குறுதி கொடுத்துச் சரணாகதி அடைந்ததற்கு ஏற்ப காங்கரஸ் மந்திரிகள் சர்க்காருக்கு எவ்விதத் தொந்திரவும் கொடுக்காமல் மாகாண கவர்னர்களுக்கு அடிமைகளாக இருந்து "எங்கள் கவர்னர் (லார்ட் எர்ஸ்கின்) எங்கள் நண்பர், எங்களுக்கு வழி காட்டுபவர், அவர் எங்கள் குரு" என்று பொதுக் கூட்டங்களில் சிறிதும் வெட்கமில்லாமல் சொன்னார்கள். "சர்க்காரைக் குறை கூறாதீர்கள்" என்று முதல் மந்திரியார் மக்களை வேண்டிக்கொண்டார். பொது உடைமைப் பிரசாரம் நடக்கக் கூடாது என்று கட்டளை இட்டு பொது உடைமை வாதிகளைத் தொல்லைகொடுத்தார்கள். தொழிலாளிகளையும் சுட்டார்கள். தாங்கள் பதவிக்குவந்ததும்எடுத்துவிடுவதாகச் சொன்ன சட்டங்களையும், (C. I. D )சி. ஐ. டி. இலாக்காவையும், ரெவனியூபோர்டு ஆபீசையும், ஆபீசர்களையும் எடுக்காமல் அவைகளைத் தங்களுக்கு ஆதரவாகக் கொண்டு ஆட்சி நடத்தினார்கள். பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற எப்படி கிரிமினல் அமெண்மெண்ட் ஆக்டும்(C.I.D.)சி.ஐ.டி.யும்தேவை இருந்ததோ அதேபோல்தான் காங்கரஸ் ஆட்சிக்கும் அவற்றின் தேவையும் அமுலும் இருந்தனவென்னலாம்.

அப்படியெல்லாம் இருந்தும் காங்கரசார் பதவியை விட்டு ஏன் போனார்கள்? அல்லது ஏன்போக வேண்டியவர்களானார்கள்? என்ற கேள்வி பிறக்கலாம். அதென்னவெனில்காங்கரசார்தோழர் போஸ் அவர்களை (அவர் ஒரு திராவிடர்) ஒழிப்பதற்கு ஆக அந்தமாதிரியான சங்கடத்தில் மாட்டிக்கொண்டார்கள்.தோழர்போஸ்காந்தியார்,பண்டித நேரு ஆகியவர்களை எதிர்த்து காங்கரஸ் தலைமைப் பதவிக்குப் போட்டி போட்டார். அப்போது இந்திய முதலாளிகள் பயந்து காந்தியாரைத் தஞ்சமடைந்து எப்படியாவது போஸ் தலைவராகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கெஞ்சினார்கள். அதுசமயத்தில் காந்தியார் காங்கரஸ் ஸ்தாபனங்களை போஸை எதிர்த்து ஓட்டு செய்யும்

## தீபாவளி

திராவிடர்களே! தீபாவளி வரப்போகிறது. என்ன செய்யப்போகிறீர்கள்?

தீபாவளி கொண்டாடாதவர்கள் இப்பொழுதே முடிவு செய்துகொண்டு மற்றவர்களுக்கும் பிரசாரம் செய்யுங்கள்.

திராவிடர் கழகம் இம்மாதத்தில் செய்ய வேண்டிய வேலை இதுதான். தீபாவளி கொண்டாடாத ஆண் பெண்களிடம் ஆங்காங்குள்ள கிளைக் கழகத்தார் கையெழுத்து வாங்கி அனுப்புங்கள். தொடர்ந்து வாங்கிக்கொண்டே இருங்கள். தீபாவளிக்கு முந்தினவாரத்தில் பத்திரிகையில் வெளியிடலாம்.

மாநாட்டில் விறுவிறுப்பான தீர்மானம் இல்லை என்று வாலிபத்தோழர்கள் சலிப்படைந்தார்கள். அவர்களது சலிப்பு உண்மையாய் எழுந்த ஊக்கத்தின் பாற்பட்ட எழுச்சியால் இருக்குமானால் ஏராளமாய் கையெழுத்து வாங்குங்கள். ஓட்டர் பதிவுசெய்வதும் அவர்களிடம் கையெழுத்து வாங்குவதும் பித்தலாட்ட வாழ்க்கைக்குப் பயன்படத்தான் உதவும். நாம் வாங்கும் கையெழுத்து திராவிடர்களுக்கு உண்மையான உயர் வாழ்வுக்கும் மான வாழ்வுக்கும் உதவும்.

திராவிட இளைஞர்களே, இளம் பெண்மணிகளே! தீபாவளி கொண்டாடக்கூடாது என்று பிரசாரம் செய்து கையெழுத்து வாங்குங்கள்!

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள் ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தகப்பன் பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க.ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

படி வேண்டிக்கொண்டார். அதற்கு போஸ் அவர்கள் "அடுத்தாற் போல் நடக்கப்போகும் யுத்தத்தில் (அப்போது யுத்தம் வரும் என்கின்ற நம்பிக்கையாவருக்கும்தென் பட்டது) பிரிட்டிஷாருக்கு உதவி செய்யக்கூடாது என்கின்ற பிரச்சினைமீது நான் காங்கரஸ்தலைமை பதவிக்கு நிற்கிறேன். ஆதலால் வேறு யாராவது அந்தப் பிரச்சினை மீது நிற்பதானால் நான் விலகிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னதால் போஸே காங்கரஸ் தலைவரானார். அதன் பயனாய் காந்தியாருக்கும், நேருவுக்கும் ஏற்பட்ட தோல்வியை, அவமானத்தை, கெட்ட பெயரை மறைத்துக் கொள்ளுவதற்கு ஆக கோணல் வழியில் போஸை ஒழித்துவிட்டுத் தாங்களும் (காங்கரசு) யுத்தத்திற்கு உதவி செய்வதில்லை என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டியதாய் விட்டது. அந்தத் தீர்மானத்திற்கு மரியாதை கொடுப்பதற்கு ஆக சர்க்காரிடம் உள்ளுக்குள் ஏதோ தந்திரமான ஒப்பந்தம் பேசிக்கொண்டு பதவியை விட்டு வெளிவந்த பத்து நாளில் மறுபடியும் பதவிக்கு வந்துவிடுவதாகச் சர்க்காரோடு ஏற்பாடு செய்து கொண்டு விளையாட்டாக வெளியேறினார்கள். அது வினையாக முடிந்து காங்கரசாரை மறுபடியும் பதவிக்குப் போக முடியாமல் செய்துவிட்டது.

யுத்தம் துவக்கப்பட்ட உடன் காந்தியார் பிரிட்டிஷாருக்கு உதவி செய்யப் போவதாய் சைகை காட்டினார். அதாவது "லண்டன் மீது வெடிகுண்டு விழுந்தால் ஒரு வினாடியும் நான் பொறுக்கமாட்டேன் என் ரத்தம் கொதிக்கும், என் வயிறு குமுறும்" என்றார். பண்டிதர் ஜவகர்லாலும் சைனாவிலிருந்து அவசர அவரசமாக இந்தியாவுக்குப் புறப்பட்டு வரும் வழியில் கப்பலிலிருந்துகொண்டே "யுத்தம் எல்லோருக்குமே அபாயத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருப்பதால் காங்கரசு இந்த சமயத்தில் நிபந்தனை எதையும் சர்க்காரைக் கேட்காமல் நிபந்தனை அற்ற உதவி செய்ய வேண்டும்" என்று அறிக்கைவிட்டார். இதற்குள் காங்கரஸ் இல்லாமலேயே இந்தியாவில் யுத்தஆதரவு கிடைத்துவிடும் என்கின்ற நம்பிக்கை சர்க்காருக்கு ஏற்பட்டதாலும் அதுசமயம் காங்கரசைப் பதவியில் வைத்தால் மற்றவர்கள் கலகம்செய்வார்கள் என்று கண்டதாலும் சர்க்கார் பிகுவாக இருந்துவிட்டார்கள். நல்ல சமயத்தில் பாகிஸ்தான் முதலிய நெருக்கடியும் ஏற்பட்டது. காங்கரசுக்கு நாட்டில் செல்வாக்கு குறைந்து போய்விட்டது என்பதும் மக்கள் கொண்டாடிய காங்கரஸ் பதவியில் இருந்து ஒழிந்த நாள் (Deliverance Day—விடுதலை நாள்) கொண்டாட்டத்தின் போக்கிலிருந்து தெரியவந்தது.

ஆகவே காங்கரஸ் யுத்தமுயற்சிக்கு எதிர்ப்புக் கிளர்ச்சிசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் பட்டு, சில்லரை விஷமம் செய்யவேண்டியதாயிற்று.

இதை சர்க்காரும் அறிந்து கொண்டுதான் காங்கரஸ் கிளர்ச்சி பற்றி மிக்க அசார்சமாகவே இருந்து வந்தார்கள். கடைசியாக சர் ஸ்டாபோர்டு கிரிப்சு பூதம் காங்கரசை திணறச் செய்து விட்டது. பதவிக்கு வரமுடியாமலும் செய்துவிட்டது. இந்தச் சமயத்தில் வீணாய் காலம் கழிவதாகத் தெரிந்ததால் சிறை சென்று இழந்துவிட்ட செல்வாக்கைத்தேட தீவிரமான திட்டமாக "வெளியே போ" திட்டத்தைக் கண்டுபிடித்துக் கையாண்டார்கள், அந்த சமயம் சர்க்காருக்கும் யுத்தம் சற்று நெருக்கடியாகக் காணப்பட்டது. இதனால் காங்கரசார் சிறை பிடிக்கப்பட்டார்கள். நாட்டில் உள்ள காங்கரஸ்காரர்களும் காங்கரசார் திட்டம்போட்டு வைத்துவிட்டுப் போனதுபோல் வெகு ஜாக்கிரதையாக வெள்ளையனுக்கு எவ்விதக் கேடும் வராமல் தங்கள் (கருப்பு) மக்களுக்கே கேடுண்டாகும்படியான கேட்டைச் செய்து 'வீரர்' பேர்வாங்கினார்கள். இதிலிருந்தே வெள்ளையர் காங்கரசின் மீது சிறிதும் நிட்டூரப்படாமல் சண்டை முடிந்ததும் பழையபடி அவர்களிடமே ஆட்சியை ஒப்படைக்க அந்தப் பழைய 1935-ம் வருஷம் சீர்திருத்தப்படி மறுபடியும் தேர்தல் வைத்து விட்டார்கள்.

பார்லிமெண்டிலும் இந்தியா மந்திரி சபையிலும் கவர்னரும் வைசிராயும் "இனி 35-ம் வருஷத்திய சீர்திருத்தப்படி காரியம் நடக்கப் போவதில்லை" என்றும், "தேர்தல் மெஜாரிட்டிப்படி மந்திரி பதவிகள் ஏற்படப் போவதில்லை" என்றும், "எல்லாக் கட்சிக்காரர்களும் கொண்ட கலப்பு மந்திரி சபைதான் ஏற்படும்" என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லியும், ஜாடை காட்டியும் இருக்கிறார்கள். மத்தியிலும் 3, 4 வருஷ காலமாய் இந்திய பிரதான அரசியல் கட்சிகள் ஒற்றுமைப் பட்டால்தான் மேலால் ஏதாவது

செய்ய முடியும் என்றும் சொன்னார்கள்.

அப்படியெல்லாம் இருக்க இப்போது 1935-ம் வருஷத்திய சீர்திருத்தப்படி தேர்தல் வைப்பதில் முன்னையைவிட வேறு மாதிரியான நிலைமையைக் காணுவதற்கு நாட்டிலோ, தேர்தல் முறையிலோ, மக்கள் தன்மையிலோ, சர்க்கார் தன்மையிலோ, அரசாங்க அமைப்பிலோ, நடப்பிலோ என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது? என்று கேட்கிறோம். அல்லது கட்சிகள் தன்மையிலாவது என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்கிறோம். அல்லது சர்க்கார்தானாகட்டும் என்னவிதமான மாறுதலுக்குச் சிறிதாவது கவலை எடுத்து நலம் செய்திருக்கிறார்கள் என்று கருத இடமிருக்கிறது? ஒன்றும் இல்லாமல் முன்னிலும் அதிகமாகக் கட்சி வேற்றுமைகள் ஏற்பட்டு, முன்னிலும் அதிகமாக நாணயம் சட்டம் அமைதி ஒழுங்கு ஆகியவைகளுக்கு விரோதமாக நடந்த மக்களுக்கு செல்வாக்கு இருக்கும்படியாக சர்க்கார் நடந்து வந்திருக்கிறார்கள் என்றால் யார் இதை மறுக்கக்கூடும் என்று கேட்கிறோம்.

இன்று காங்கரசார் இரண்டு பிரச்சினைமீது தேர்தலுக்கு நிற்பதாக முரசடிக்கிறார்கள். அதாவது,

ஒன்று, "வெள்ளையனே வெளியே போ" என்ற பிரச்சினை.

மற்றொன்று, "ஆகஸ்ட் நாசவேலையில்சம்பந்தப்படாத தேசத்துரோகிகளையும், நாசவேலைக்கு எதிராளிகளாய் இருந்த சதிகாரர்களையும், பதவிக்கு வரச்செய்யாமல் தடுத்து அவர்களைப் பழி வாங்க வேண்டும்" என்ற பிரச்சினை.

இந்த இரண்டின்மீது காங்கரஸ்காரர்கள் நிற்கின்றபோது இவர்களை எதிர்த்து நிற்பவர்கள் வெள்ளையனை வெளியே ஓட்டுவது தவறு என்று சொல்லமுடியுமா? அல்லது நாங்கள் நாசவேலை செய்யாதவர்கள் என்பதோடு, நாசவேலை செய்தவர்களையும் காட்டிக்கொடுத்தவர்கள் ஆதலால் எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லமுடியுமா? இப்படிச் சொன்னால் ஓட்டு வருமா? என்று கேட்கிறோம்.

எப்பொழுது யுத்தம் சர்க்காருக்கு வெற்றியாய் முடிந்தவுடன் சிறையில் இருப்பவர்களை வெளியாக்கி மலைவாசத்துக்கு அரசவிருந்தினராக வைசிராய் பிரபு அழைத்து "நான் செய்ததை நீங்கள் மறந்துவிடுங்கள், நீங்கள் செய்ததை நான் (சர்க்கார் மறந்துவிட்டது)மறந்துவிடுகிறேன். ஆதலால் என்னுடைய நிர்வாக சபையை அலங்கரித்து நிர்வாகம் செய்ய வாருங்கள்" என்று வேண்டிக்கொண்டாரோ அப்பொழுதே இந்த சர்க்காரில் சாதுக்களுக்கும், யோக்கியர்களுக்கும், நடுநிலைமைக் குடிமக்களுக்கும் மானக்கேடும் ஆபத்தும் தான் என்பதாகக் காணப்படவில்லையா என்று கேட்கின்றோம்.

இந்த நிலையில் நாம்—திராவிட மக்கள்—எதற்கு ஆக இந்தமாதிரித் தேர்தலில் ஈடுபட்டு மானம்கெட்டு பணத்தையும் செலவழித்து சின்னப்பட்டம் பெற வேண்டும் என்று கேட்கிறோம்.

முதலாவது இந்த நிலைமையில் நம்மில் தேர்தலுக்கு நிற்பதற்கு ஆள் எங்கே என்று பாருங்கள். நிற்கும் ஆட்களின் அரசியல் தகுதி, நாணயம், கருத்து என்ன? என்று பாருங்கள். அவர்களது முன்பின் நடத்தை அவர்களால் அவர்கள் சொல்லிக்கொள்ளும் கட்சிக்கோ சமுதாயத்திற்கோ ஏற்பட்ட நன்மை, அவர்களுடைய கட்டுப்பாட்டுக் குணம், சொந்த நாணயம், வாழ்க்கை வரலாறு ஆகியவைகளையும் பாருங்கள். இவைகளை ஒன்றையும் பாராமல் யாரோ ஒருவர் நம் கட்சியின் பேரால் நிற்கிறார், அவருக்கு ஓட்டுக் கொடுக்கவேண்டியது நம் கடமை என்றால் நிற்கின்றவர்களும் நம்மை முட்டாள்கள் என்று கருதி நிற்கிறார்கள் என்றும், அப்படிப்பட்டவர்களுக்கு ஓட்டுக்கொடுக்க ஆசைப்படுகிறவர்களும் உண்மையில் முட்டாள்கள் என்பதோடு யோக்கியப் பொறுப்பற்றவர்கள் என்பதைத் தாங்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்றும் தான் முடிவு செய்ய வேண்டுமே அல்லாமல் இதில் ஞானம், மானம் இருக்க முடியுமா?

காங்கரஸ்காரர்கள் சட்டசபைக்கு நிற்கிறார்கள். நாம் அவர்களுக்குப் போட்டி போடுவதற்கு ஆக நிற்கிறோம் என்கிறோம். இதிலேயே நமக்கும் காங்கரசுக்கும் ஒரு நியாயமற்ற பேதம் இருக்கிறது. அதாவது அவர்கள் மந்திரி பதவி அடைவதற்கு நிற்கிறார்கள். அடையப்போகிறார்கள். நாம் அந்த எண்ணத்தோடு நிற்பதில்லை. ஏன்எனில் மந்திரி பதவி கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை இல்லாதிருந்தும் கிடைக்கும்படியான மெஜாரிட்டி நமக்கு வராது என்பதை ஒப்புக்கொண்டே நிற்கிறோம். மற்றபடி நாம் மைனாரிட்டியாய் சட்டசபையில் இருந்து அவர்களை எதிர்க்கலாம் என்கிறோம். எதிர்ப்பதற்கு நம் கொள்கை என்ன என்பது ஓட்டருக்கு, அல்லது உலகத்துக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோமா? ஓட்டருக்கு நம்மை அடையாளம் தெரியும்படி நடந்திருக்கிறோமா? காங்கரஸ்காரர்கள் ஓட்டர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். நாம் எத்தனை ஓட்டர்களைச் சேர்த்து இருக்கிறோம்? காங்கரஸ்காரர்கள் நிறைய தொண்டர்களை வைத்து இருக்கிறார்கள். நம்மிடம் எத்தனை தொண்டர்கள் இருக்கிறார்கள்? இந்தச் சாதாரண விஷயங்களில் நம் நிலை இப்படி இருந்தால் மற்ற பெரிய விஷயங்களில் நம் தன்மை எப்படி இருக்கும்?

பச்சையாகவே பேசுவோமேயானால் இன்றைய தேர்தலில் காங்கரசும் அது தவிர மற்றவர்களும் தங்கள் கட்சிப்பேரைச்சொல்லக்கூடும். ஒருவர் கம்யூனிஸ்ட் என்பார், மற்றவர் டிமாக்ரெடிக் பார்ட்டி என்பார், மற்றவர் இந்து மகாசபை என்பார், இன்னொருவர் முஸ்லிம் லீக் என்பார், இனியும் ஒருவர் வருணாச்சிரம சுயராஜ்ஜிய சங்கம் என்பார். சென்ற வாரத் தலையங்கத்தின் இறுதியில் குறிப்பிட்டதுபோல்தோழர்கள்சர் பி. டி. ராஜன் முதலியவர்கள் தேர்தலுக்கு நின்றால் என்ன கட்சி என்று தங்களைச் சொல்லிக்கொள்ள முடியும்? என்று கேட்கிறோம்.

இவர்கள் மேல்கண்ட ஏதாவது ஒரு கட்சியின் பேரால் நிற்பதாயிருந்தால் நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் அவர்கள்

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

13-10-45 வரை சேர்ந்துள்ள அங்கத்தினர் 34112 பேர்.
சந்தா வரவு ரூ. 3391-8-0

அப்படிக்கு இல்லாமல் தங்களுக்கு யோக்கியமாய் சம்பந்தமில்லாத ஜஸ்டிஸ் கட்சியின் பேரைச் சொல்லிக்கொண்டு நிற்கிறார்கள் என்றால் அதன் கருத்து என்ன? ஜஸ்டிஸ் கட்சியானது பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டும் என்பதோடு தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்பதாகத் தீர்மானித்திருக்கிறது. அப்படியிருக்க அதே கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு கட்சியார் அல்லாத ஒருவர் தேர்தலுக்கு நிற்கிறார் என்றால் அப்படிப்பட்டவர் கட்சியின் எதிரி என்றும், கட்சியின் பெருமையை அழிக்க முயற்சிப்பவரென்றும், கட்சிக்கே துரோகம் செய்பவரென்றும் ஏற்படுகின்றதா இல்லையா? என்று கேட்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு திராவிட மக்கள் எதற்கு ஆக ஓட்டுச் செய்து அவர்கள் வெற்றி (பெறப்போவதில்லை!) பெற உதவவேண்டும்? என்று யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறோம்.

இவர்களுக்கு ஓட்டு செய்பவர்கள் திராவிடர்களாயிருப்பார்களானால் தங்களுக்குத் தாங்களே கேடு செய்துகொண்டவர்களாகிறார்களா இல்லையா? தங்கள் கட்சியை இழிவுபடுத்துபவர்களுக்கு உடந்தையாய் இருந்தவர்களாக ஆகிறார்களா இல்லையா? என்றும் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

காங்கரஸ்காரர்கள் ஆகஸ்டு நாசவேலையில் சேர்ந்தவர்களைத் துரோகி என்றார்கள் என்றால், நாம் நம் கட்சியின் பெயரையே அழிக்கக் கருதி நம் பெயரையே வைத்துக் கொண்டு நம் கட்சியையே போலி என்றும் நாஸ்திகக் கட்சி என்றும் மத விரோதக் கட்சி என்றும் குறை கூறிக் கேடு செய்ய முயற்சிப்பவர்களுக்கு, அதுவும் முயற்சி செய்யும்படியான காரியத்திற்கே உடன்பட்டுப் பங்கு நாம்கொள்ளுவதென்றால் எந்தவிதத்தில் அது அறிவுடைமையோ மானமுடைமையோ ஆன காரியம் ஆகும் என்றும் கேட்கிறோம்.

காங்கரசிலும் ஒரு காலத்தில் இப்படிப்பட்ட தேர்தல் பட்டம் பதவிகள் பஹிஷ்காரத் தீர்மானம் வந்த காலத்தில் ஒரு கூட்டம் அதை எதிர்த்தது என்றாலும் அது வேறு பெயர் வைத்துக் கொண்டு எதிர்த்ததே தவிர காங்கரஸ் பெயரை வைத்துக்கொண்டோ அதற்குக் கேடு செய்யும் முயற்சியில் இறங்கியோ அதன் மீது பழிசுமத்திக்கொண்டோ வேலை செய்யவில்லை. அதனாலேயே காங்கரஸ்காரர்களும் மறைமுகமாய் அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்தார்கள்.

அதுபோல் இந்தக்கூட்டமும் வேலை செய்திருந்தால் அது நாணயம் என்று சொல்லாவிட்டாலும் புத்திசாலித்தனமான காரியம் என்றாவது சொல்லப்படலாம். அப்படியும் இல்லாமல் தற்கொலைக்கு ஒப்பாக "நாங்கள் தான் ஜஸ்டிஸ்கட்சிக்காரர்" என்று சொல்லிக்கொண்டு ஜஸ்டிஸ்கட்சித் தீர்மானத்திற்கு விரோதமாக நடந்துகொண்டு இருப்பவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஓட்டுச் செய்யவேண்டும் என்று சொல்லுவதானால் அது எப்படி நியாயமான காரியமாக இருக்கமுடியும் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

தேர்தலை சிலர் விளையாட்டாகக் கருதுகிறார்கள். இப்படிக் கருதுகிறவர்கள் பணக்காரர்களானால் அவர்களுடைய பண ஆணவமும், பணமில்லாதவர்களானால் அவர்களுடைய மடமையின் முதிர்ச்சியுமாகும். மடமை இல்லாவிட்டால் தேர்தலின்பேரால் பணம் திரட்டலாம் என்கின்ற 'பிளாக் மெயில்' என்று சொல்லப்படும் ஈன வழிக் காரியமே யாகும்.

வெறும் காலிகள் வெறும் கையை வைத்துக் கொண்டு தேர்தலுக்கு நிற்பதும், 'தேர்தலுக்கு நின்று விட்டேன் செலவுக்கு நீ பணம் கொடு, நீ பணம் கொடு' என்று ஊர் சுற்றிப் பிச்சை எடுப்பதும்,கட்டின பணமாவது திருப்பி வாங்கவேண்டாமா என்ற கவலை கூட இல்லாமல் (தன் பணமாக இருந்தால் தானே கவலை!) கிடைத்த பணத்தை அபேஸ் செய்து கொண்டு மேலும்பணம் கொடுக்கவில்லையே என்று கொடுத்தவர்களையும் வைது கொண்டும், தேர்தல் அன்று உடல் நலமில்லை என்று மறைந்துகொண்டும் திரிகிற ஆட்கள் தேர்தலுக்கு நிற்பதும், நிற்க அனுமதிப்பதும், நிற்கின்ற செலவுக்கு என்று பணம் கொடுப்பதும் மிக்க வெறுக்கத்தக்க, முட்டாள் தனமான, ஏமாளித்தனமான காரியமாகும். இப்படி சிலர் நடந்ததாலேயே ஜஸ்டிஸ் கட்சிக்கு இழி பெயர் ஏற்படக் காரணமாயிற்று என்னலாம்.

உண்மைத் திராவிட மக்கள் இப்படிப்பட்ட காரியங்களை ஆதரிக்கமாட்டார்கள் என்றே கருதுகிறோம். உண்மையில் தங்கள் தனிப்பட்ட— கொள்கையில்—சக்தியில் ஆசை, நம்பிக்கை இருந்து தேர்தலுக்கு நிற்பவர்கள் நிற்கட்டும்; அதில் யாவரும் குறுக்கிடுவதில்லை. மற்றொரு கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு மற்ற கட்சிக்குக் கேடு உண்டாகும் தன்மையில் முறை தவறாக நடந்துகொள்ளுவது சரியல்ல என்பதோடு அனுமதிக்க முடியாததுமாகும் என்போம்.

காங்கரசை சர்வசக்தியுடன் எதிர்க்கவேண்டுமானாலும், சர்க்காருக்கு அறிவுறுத்தவேண்டுமானாலும் இப்போது நாம் தேர்தலில் எவ்விதப் பங்கும் கொள்ளாமல் தேர்தலில் காங்கரசை ஏகபோகமாய் விட்டுவிட்டு சரியான, கட்டுப்பாடான எதிர்ப்பு முன்னணியை வெளியில் ஸ்தாபிக்கவேண்டியதேயாகும். இந்தத் தேர்தலை நியாயமான—ஜனப்பிரதிநிதித்துவமான தேர்தல் அல்ல என்று நிரூபிக்க வேண்டியதேயாகும். இதுதான் திராவிட மக்களுக்குத் தேர்தல் சம்பந்தமாக இப்போது திராவிட கழகம்—ஜஸ்டிஸ் கட்சி—விண்ணப்பித்துக்கொள்வதாகும்.

---

## இன்னும் கூட்டத்தில் கலவரமா?

திராவிட கழகத்தவர்கள் மற்ற கட்சியார் கூட்டங்களில் கலவரம் செய்ததாக மறுபடியும் பத்திரிகைகளில் சேதி காணப்படுகின்றது.

இது உண்மையாய் இருக்குமானால் நாம் மிகவும் வருந்துகிறோம். இனியாவது இந்தமாதிரி பிறர் சொல்லுவதற்கு இடம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நம் தோழர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

நமக்கு இன்று பொதுமக்களை ஏய்க்க வேண்டிய அவசியம் ஒன்றமில்லை. அதோடு நம்மைப்பற்றி யார் என்ன சொல்லிக்கொண்ட போதிலும் அதை லட்சியப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை. யார் என்ன சொன்னபோதிலும் நம்மை எவரும் ஒன்றும் செய்துவிடப் போவதில்லை. நம்முடைய சரக்கு அப்படிப்பட்ட தனியான, மேன்மையான குணமுடையது. அதற்குப் போட்டிபோட எவராலும் முடியாது. நாம் வீட்டுக்குள் வைத்துக் கொண்டு விற்றாலும் அது நல்லபடி செலவாகக்கூடியதும், தானாகவே அல்லது நம் எதிரிகள் மூலமாகவே விளம்பரம் செய்துகொள்ளக் கூடியதுமாகும்.

உதாரணமாக திருச்சி மாநாடுகள் முடிந்தவுடன் நம்மவர்கள் என்று சொல்லிக்கொள்ளும்படியான நம் எதிரிகளே நம் மீது பழி சுமத்தி நமக்குத் துன்பம் விளைவிக்கப் போவதாய்க் கருதிக் "கோவிலில் கலாட்டா, சாமியை உடைத்தார்கள், சாமியைப் பின்னம் செய்தார்கள்" என்று "ஜஸ்டிஸ் கட்சியார்" என்று பேர்வைத்துக்கொண்ட ஒரு போலிக் கூட்டம் நம் மீது (ஜஸ்டிஸ் கட்சியார் மீது) கண்டனத் தீர்மானம் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. இது (சாமியை உடைத்தது) உண்மையாய் இருக்குமானால் இது நடக்க வேண்டுமென்பது நமது விருப்பமல்ல. நடத்தவேண்டுமென்று நாம் யாரையும் தூண்டவில்லை. இப்படி நம்மவர்கள் ஏதும் செய்யக்கூடாது என்றும் நம் தோழர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தப்படி நடந்திருந்தால் உண்மையில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இது தண்டவாளத்தைப் பெயர்ப்பதைவிட, கட்டிடங்களுக்கு நெருப்பு வைப்பதைவிட, அதிகாரிகளைக் கொல்லுவதைவிட அயோக்கியத்தனமான காரியமென்றோ, கேடு உண்டாகும்படியான காரியமென்றோ, நாம் கருத வில்லை, என்பதோடு, இப்படி (தண்டவாளப் பெயர்ப்பு) செய்தவர்களைப் பாராட்டுவதைவிட இது ஒரு வெட்கம் கெட்டதனம், பொறுப்பற்றதனம், என்றும் நாம் கருத வில்லை.

ஆனால் அந்த விக்கிரகங்களில் நம்பிக்கை உள்ள ஒரு சிலருக்காவது ஏன் மனவருத்தமுண்டாகும்படி நாம் செய்ய வேண்டும்? என்பதற்குஆக நம்மவர்களை இனியும் கொஞ்சம் பொறுத்திருங்கள், விஷயங்களை நன்றாய் எடுத்துச் சொல்லிக்கொண்டிருங்கள், அந்த விக்கிரகங்கள் தாமாகவே மறைந்து போகும்படியான காலம் வரும் என்று சொல்லுகிறோம்.

கல்லில் கடவுளோ, பூதமோ இருக்கிறதென்றோ, கல்லுக் கடவுளுக்கோ பூதத்துக்கோ ஒரு காப்பு பூத கணமும், சேனாதிபதியும், வரவேற்புத் தலைவரும் இருக்கிறதென்றோ, இருக்குமென்றோ, இருக்கவேண்டுமென்றோ நாம் கருதுவதில்லை. அதனால்தான் நாம் அதற்கு ஆக விசனப்படவுமில்லை. ஒரு முஸ்லீமும், ஒரு கிருஸ்தவனும், ஒரு பவுத்தனும், பிரம்மசமாஜியும் ஒரு நாஸ்திகனும் இந்தக் கடவுள் தன்மைகளைப் பார்த்து எப்படி கையாண்டி செய்து சிரிப்பாரோ அது போல் நாமும் சிரிப்பதோடு மகிழ்ச்சியுமடைகிறோம். ஆனால் நம்மவர்கள் அதாவது கழக அங்கத்தினர்கள் இதைச் செய்ய வேண்டாம் என்கின்றோம். அதோடு கம்யூனிஸ்ட்டுகள் உண்மையானவர்களாக இருந்தால் அவர்கள் செய்யட்டுமே என்கிறோம்.

எனவே S. I. L. F. என்கின்ற பித்தலாட்டக் கூட்டத்தார் மதப் பித்தர்களின், கடவுட் பித்தர்களின் ஓட்டுகளைப் பெறுவதற்கு ஆக பத்திரிகை நிருபர்களைவிலைக்குவாங்கிஇந்தமாதிரிநம்மீது அயோக்கியத்தனமான பழிச்சேதிகளைப் பரப்புவதற்கு ஆக யாரும் நம்பவேண்டாம் என்றும், கவலைப்படவேண்டாம் என்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

———

## ஆச்சாரியார் காமராஜ்நாடார் போராட்டம்

ஆச்சாரியார் சென்ற இடத்துக்கு காமராஜரும், காமராஜர் சென்ற இடத்திற்கு ஆச்சாரியாரும் சென்று தலைவர் போட்டிப் பிரசங்கங்கள் பிரசாரங்கள் செய்து வருகிறார்கள். கூட்டங்களில் கலவரம் கல்வீச்சுகள் நடக்கின்றன. இது நல்லதல்லவானாலும் இந்த வருடம் "சங்கராந்தி" (அரசியல் கிளர்ச்சி என்பது) அரசியல் கட்சிகளின் மீது வந்திருப்பதால் இந்து-முஸ்லிம் கலகம், காங்கரஸ்—கம்யூனிஸ்ட் கலகம், இந்துமாகாசபை—காங்கரஸ் கலகம், ராய் கட்சி—கம்யூனிஸ்ட் கலகம், ராய் கட்சி—காங்கரஸ் கலகம், முஸ்லிம்களுக்குள் தேசிய முஸ்லிம் வகையரா—லீக் கட்சி கலகம், திராவிடர்களுக்குள் பட்டம் பதவி தேர்தல் வேட்டை திராவிடர்-பட்டம் பதவி தேர்தல் வேட்டை வேண்டாத திராவிடர் கலகம், காங்கரசுக்குள்ளாகவே காமராஜா கட்சி—ராஜகோபாலாச்சாரி கட்சி கலகம் இப்படியாக இன்னும் பலவித கட்சி கலகம் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இவற்றுள் நல்ல சுகவாசிகள் அதாவது கவலை அற்ற தன்மையில் உள்ளவர்கள் நாமாகிய பட்டம் பதவி தேர்தல் வேட்டை தேவையில்லாத திராவிடர்களேயாகும். ஆதலால் நாம் இந்தக் கலகங்களைக்கண்டு களித்துக்கொண்டும் நம் வேலையைப் பார்த்துக்கொண்டும் சுகமாக இருக்கலாம். ராஜகோபாலாச்சாரியார்,—காமராஜ் நாடார் சண்டையில் ஆச்சாரியார்தான் ஜெயிப்பார். காமராஜ் முகத்தில் கரி பூசப்பட்டு விடும்.

ஏன் என்றால் ஆச்சாரியார் ஆரியர் கூட்டத்தைச் சேர்ந்தவர், காமராஜர்கள் திராவிட கூட்டத்தைச் சேர்ந்தவர், ஆரியனுக்கு இனப்பற்று, அவனது "நாட்டு"ப்பற்று, கட்டுப்பாடு உண்டு. திராவிடனுக்கு இனப்பற்று, நாட்டுப் பற்று கட்டுப்பாடுகிடையாது என்பதோடு இந்தத் திராவிடர் எந்த இனம், எந்த நாடு என்பதும் மறந்தவர்கள் ஆதலால் ஒன்று சேரமாட்டார்கள். இவ்வளவு அசௌகரியம் தவிர வார்தா ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்ட தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியாய் இருப்பதால் காமராஜர்கள் கத்தலாமே தவிர காரியம் காந்தியார்கள் கையிலிருக்கிறது. அன்றியும் ஆச்சாரியாரிடம் நல்ல சரக்கும் விளம்பரமும் இருக்கிறது. 'விளம்பரமே வியாபாரத்திற்கு அழகு.' காமராஜர்களை பத்திரிக்கைக்காரர்கள் நல்ல சமயத்தில் கவிழ்த்து விடுவார்கள். நல்ல சமயத்தில் காமராஜர்களை காங்கரஸ் 'தமிழர்கள்' கைவிட்டுவிட்டு ஓடிவிடுவார்கள்: அது சமயம் காமராஜர்களும் வெளியேறாமல் சரணாகதி அடைந்துவிடுவார்கள்.

## முகவரி

திருவாரூர் "முரசொலி" எழுத்தாளர் தோழர் மு. கருணாநிதி அவர்களின் தற்கால முகவரி:

மு. கருணாநிதி,
C/o குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

## நாடக நாத முழக்கம்

சென்ற ஆண்டு பெரியார் ஈ. வெ. ரா பிறந்த புனித நாளிலே ஆரம்பித்த எங்கள் புதுமை நாடகம்

## "ஞானோதயம்"

நம் திராவிட நாட்டுத் தளபதி செந்நாமொழி புலவர் C. N. அண்ணாத்துரை M. A. அவர்களின் சீரிய தலைமையில் 26-10-45 வெள்ளிக்கிழமை இரவு 10-30 மணிக்கு தங்கவயல் ஆண்டர்சன் பேட்டை ஜுபிலி ஹாலில் தங்கவயல், தன்மான நடிகர் கழகத்தவரால் சிறந்த ஆண் பெண் நடிகர்களைக் கொண்டு அதிக உன்னத, உயர்ந்த முறையில் நடத்தப்படும்.

எமது அடுத்த நாடகம் சென்னையில் விரைவில்நடைபெறும்.

உரிமையாளர்: B. இருச்சன்.
கதை, வசனம், பாட்டு
சீர்திருத்தக் கவியின் சிகாம்,
K. G. துரைராசன்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தோள் தட்டச் செய்வதும் இன எழுச்சியே யாகும். "இன எழுச்சியே நாங்கள் திராவிடர்" என்று பெருமிதம் கொள்ளச் செய்கிறது. மதத்தை மட்டந் தட்டுவோம் என்று மார்தட்டச் செய்வதும் இன எழுச்சிதான். இதன் பலனாக, ஆரியச் சதிச் செயல்கள் இன்று அம்பலமாகிச் சந்தி சிரிக்கின்றன. புலமை நிறைந்த புனித ஏடுகள் எனப் பூசிக்கப் பட்டவை இன்று வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் பரிகசிப்புக்கும் இலக்காகித் தீக்கிரையாகின்றன.

இவ்வள விருந்தும் இன்னும் திராவிடர்களுள் பெரும்பகுதியினரைப் பற்றியுள்ள ஆரிய அடிமைத் தனம் அகலவில்லை, தன் மான வளர்ச்சி பரவவில்லை; இன விடுதலை ஏற்படவில்லை. எனவே முழுவதும் ஆரியப் பிடிப்பிலிருந்து அடியோடு விடுதலை பெறவும், திராவிட நாடு தனியரசு பெற்றுச் சிறப்புற்றோங்கவும் திட்டம் வகுக்கவே இன்று நாம் இங்குத் திரண்டு குழுமியுள்ளோம்; திடசித்தமும் தீவிர நோக்கமும் கடமையில் களிப்பும் பதவியில் வெறுப்பும், தொல்லை எதுவரினும் ஏற்கும் துணிவும், தியாகத்திற்குத் துணிந்து நிற்கும் மன உறுதியும் படைத்த இளைஞர்களே! இன விடுதலைக்கு, திராவிடத் தனியரசுக்குத் திட்டம் வகுக்க நம் முன் நிற்கும் கடமை என்ன? நாம் ஆற்றவேண்டியிருக்கும் செயலென்ன? திராவிட நாட்டின் திக்கெட்டிலும் தன்மானத் தீயை நாம் பரப்பவேண்டாமா? எங்கு நோக்கினும் எழுச்சி, ஆர்வம், கிளர்ச்சி, உணர்ச்சி, புரட்சி வாடை வீசுமாறு செய்யவேண்டாமா? தெருவெங்கும் தன்மான மணம் வீச்வைக்க வேண்டாமா? தெருத் தெருவாக, வட்டாரமாக, சிற்றூர் சிற்றூராக, ஓரிடம் விடாமல் மூலை முடுக்குகளிலெல்லாம், திராவிட நாடு முழுவதிலும் சுயமரியாதை இயக்கத்தின் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டாமா? திராவிடர் அனைவரையும் சுயமரியாதை உணர்ச்சி உடையவர்களாக, இனப்பற்று மிகுந்தவர்களாக, உண்மை உணர்ந்தவர்களாக, ஆராய்ந்தறியும் அறிவாற்றல் பெற்றவர்களாக ஆக்குதல் வேண்டாமா? ஆரியமும், அவர் தம் மயக்கு வித்தைகளில் மூழ்கிக் கிடப்போரும் நமக்கு எதிரிகளாக நின்று சூழ்ச்சியையும், வஞ்சகத்தையும், தந்திரத்தையும் கருவிகளாகக் கொண்டு நம் முயற்சிகளை, மாயவைக்கக் கருதுகையில், நாடெங்கும் சுயமரியாதை இயக்கக் கிளைகளைத் தோற்றுவித்துத் தன்மான முரசொலியைத் திராவிடமெங்கும் ஒலிக்குமாறு செய்யவேண்டாமா? இவைகளன்றோ நம்முடைய இன்றியமையாக் கடமைகளாக விளங்குகின்றன! இவற்றை நிறைவேற்றியே தீருவோம். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்று இன்றே உறுதிகொள்ளுங்கள்!

இறுதியாக, நம்முடைய பொது எதிரிகள் நம் முயற்சியை நசுக்க நினைக்கும் நேரத்திலே காலத்திற்கேற்ப இன்று ஆரியம் புதுப் புதுக் கோலங்களில் காங்கரஸாய், அரிஜன இயக்கமாய்க் காட்சியளித்து திராவிட மக்களுட் சிலரை மருட்சியடையச் செய்துவரும் வேளையிலே நம்முட் பட்டம் பதவிகளில் சபலம் கொண்டு சட்டசபைகளில் அங்கம் வகிப்பதும் சர்க்கார் ஆட்சியில் அமர்வதுமே வாழ்க்கையின் லட்சியம் என மயங்கி, பிளவு பட்டுப் பிரிந்து கிடக்கின்றனர், சிலர் சிறு காரணங்களை மனத்திற்கொண்டு தனித்து நிற்கின்றனர். பிரிந்து கிடப்பதாலும் தனித்து நிற்பதாலும் திராவிடத் தனியரசுப் போரைத் திறம்பட நடத்திவிட முடியாதென்பதையும் நம் பொது எதிரிகள் நம்முள் ஏற்பட்டிருக்கும் ஊடலைப்பிளவாகக் கூட்டிப் பயன்படுத்திக்கொள்ள இடந்தரக்கூடாதென்பதையும், நம் பொது நோக்கை மனத்திற் கொண்டு, ஒன்றுபட்டு நின்று, நம் தலைவர் பெரியார் அவர்களின் சீரிய தலைமையில், வீறுகொண்டு முன்னணியில் முனைந்து நின்று நாடெங்கும் தன்மான உணர்ச்சியைப் பரப்பி, திராவிடத் தனியரசு காணும் உரிமைப் போரைச் சிறப்பாக நடத்தி, ஆரிய அகந்தையைச் சிதைத்து, அதன் கொடிய ஆதிக்கத்தை அடியோடு அழித்து, சுயமரியாதை வெற்றி முரசு கொட்டி, திராவிட மக்களைத் தரணி ஆளும் திறமுடையோராய் ஆக்கித் திராவிடத் தனியரசுகண்டு வெற்றி மாலை சூடுவோமாக! நம் நாடு நமக்கே! வாழ்க திராவிடம்! வெல்க திராவிடர்! வாழ்க நம் தலைவர் பெரியார்.

---

# திருமணங்கள்

கோவில்பட்டி தாலுக்கா சோழபுரம் கிராமத்தில் 12-9-45 அன்று தோழர்கள் பி. குழந்தை ஆழ்வார்—வெற்றிச் சுந்தரி அம்மையார் வாழ்க்கை ஒப்பந்தம் கோவில்பட்டி தோழர் ஈ. வி. ஏ. வள்ளி முத்து அவர்கள் தலைமையில் விருதுநகர் தோழர் ஆ. வ ப. ஆசைத்தம்பி அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அனுப்பப்பட்டது.

o o

தஞ்சை ஜில்லா, சத்தியமங்கலம் தோழர் அ. தேவநாயகிக்கும், குற்றாலம் தோழர் வி. சுப்பராயனுக்கும் ஆவணி 11-ம் நாள் மணமகள் இல்லத்தில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்த நினைவாகக் 'குடி அரசு', 'திராவிடநாடு', சாக்கோட்டை சமதர்ம வாசகசாலை ஆகியவைகளுக்கு ரூ. 1 வீதம் தரப்பட்டது.

o o

பூந்தோட்டம் தோழர் பக்கிரிசாமி நாடார் மகன் கணபதிக்கும், காரைக்கால் தோழர் பழனிச்சாமி நாடார் மகள் சரஸ்வதிக்கும், தோழர் காளியப்ப நாடார் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் ஆவணி 25-ம் நாள் நடைபெற்றது. பூந்தோட்டம் தோழர்களால் மணமகனுக்கு சன்மானம் அளிக்கப்பட்டது. 'குடி அரசு'. வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

o o

அரசூருக் கடுத்த கூத்தியம்பேட்டை கிராமத்தில் 11-9-45 அன்று மீன்சுருட்டி தோழர் குஞ்சிதபாதம்-ஆக்கூர் தோழர் பட்டம்மாள் ஆகியோரின் சீர்திருத்தத் திருமணம் புலவர் நா. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் எஸ். ஆர். சாமி, பி. தம்புசாமி, ரெத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

முத்துப்பேட்டை தோழர்கள் கணபதி—வைரக்கண்ணு வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் கோவிந்தசாமி தலைமையில் 13-9-45 காலை 11 மணிக்கு நடைபெற்றது. தோழர்கள் ஆர். சாமிநாதன், மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினர். மணமக்களுக்கு திராவிட கழகத்தாரின் வாழ்த்துப் பத்திரமும் பல பரிசுகளும் வழங்கப்பட்டன.

## திராவிட நாட்டுச் செய்திகள்

பட்டுக்கோட்டை சு. ம. சங்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்கள் 10-9-45 இரவு நடைபெற்றன. திருச்சியில் நடைபெறப் போகும் இரு மாநாடுகட்கும் பெரியார் அவர்களையே தலைவராகத் தெரிந்தெடுக்குமாறு வரவேற்புக் கழகத்தாருக்குச் சிபார்சு செய்வதாயும், மாநாடுகளுக்குப் பிரதிநிதிகளாக திராவிடர்கழகச் சார்பில் 42 பேரும், சு. ம. சங்கச் சார்பில் 13 பேரும் செல்லுவதென்றும், சு. ம. சங்கக் கமிட்டியில் அங்கம் வகிப்பவர் கொள்கைமீறி நடந்தால் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தலைவருக்கு அதிகாரமளிப்பதாயும், திருச்சி மாநாடு செய்திகளை இனி ஸ்லைடுகள் மூலம் விளம்பரம் செய்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

திருச்சி மாநாடுகட்கும் பட்டுக்கோட்டை தாலுகாவில் வசூல் பெட்டிமூலம் ரூ. 102ம், டிக்கட்மூலம் ரூ 135ம் வசூலானதில் செலவு ரூ. 1-11-0 போக மீதி ரூ 235-5-0 தோழர் பொன்னுசாமி அவர்களால் தோழர் நீலமேகம் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டதென்றும், மீண்டும் வசூல் நடக்கிறதென்றும் செயலாளர் எழுதுகிறார்.

குணமங்கலம் தாழ்த்தப்பட்ட இளைஞர் கழக 3-ம் ஆண்டுவிழா, மன்னை தோழர் கருணாகரன் தலைமையில் 26-8-45 அன்று நடைபெற்றது. பலர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் ரத்தினம், சனிமூர்த்தி, ராசன், ரத்தினவேலு, ரத்தினசாமி ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், அமைச்சர், உபஅமைச்சர், பொருளாளர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவை சேர முஸ்லிம் யுவ ஜன சங்க ஆண்டு மாநாடு 10-9-45-ல் நடைபெற்றது. தோழர் சர்தார் ஹயாத்கான் சாஹிப் தலைமையில், தோழர் அர்முகமது இப்ராஹிம்சேட் கொடியேற்றினார். தோழர் பாவா சாஹிப் திறந்துவைத்தார். தோழர் பி. கே. பாபுசாஹிப் வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் குஞ்ஞப்பா சாஹிப், குஞ்சு முகமது சாஹிப், மூசப் சாஹிப், குஞ்ஞமது சாஹிப், மதனி சாஹிப் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் வைசாத் பக்ஷ் இன்னிசை நிகழ்த்தினார். தோழர் வையது முகமது சாஹிப் நன்றி கூறினார்.

14-வது தென்னிந்திய விவசாயிகள் மாநாடு பட்டுக்கோட்டையில் செப்டம்பர் மாதம் நடக்கவிருந்ததை வேலைத் திட்டத்தை எதிர்பார்த்து ஒத்திவைத்திருப்பதாகவும், மத்திய போர்டாரால் சரியான காலத்தில் கூட்டப்படுமெனவும் தலைவர் தோழர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அறிவிக்கிறார்.

பொன்மலையில் பெரியார் தொண்டர் படைக் கூட்டம் 28-8-45 மாலை தோழர் வி. எஸ். பெருமாள் தலைமையில் நடந்தது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், நைனாராஜு மற்றும் பலர் பேசினர். தொண்டர் படையில் யாவரும் சேருவதென்றும், இலங்கைத் தோழர் துரைசாமி மறைவு குறித்து அன்னார் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிப்பதாயும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்தில் முதலாவதாக பி. ஏ. தேறிய தோழர் கே. பொன்னனுக்கு 9-9-45-ல் தோழர் வீரசாமி. பி. ஏ., அவர்களால் ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர் இருதயசாமி எம். ஏ., பி. எல்., தலைமையில் தோழர்கள் வீரசாமி பத்தர் எம். ஏ., எல். டி., காப்டன் டி. வி. கிருஷ்ணன் எம். ஏ., ரம்போலா மஸ்கரேனஸ் பி. ஏ., (ஜூனியர்) ஆகியோர் பட்டதாரியைப் பாராட்டிப் பேசினர். தோழர் வீரசாமி பத்தர் அவர்களால் ஒரு வாசகசாலையும் திறந்து வைக்கப்பட்டது.

திருச்சி மாநாடுகளில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமைதாங்க வேண்டுமென சேலத்திலுள்ள அடியிற் கண்ட கழகங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளன; சேலம் மாவட்டத் திராவிடர்கழகம், சேலம் டவுன் திராவிடர் கழகம், செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகம், அரிசிப்பாளையம் திராவிடர் கழகம், பொன்னம்மாப்பேட்டை திராவிடர் கழகம், அம்மாப்பேட்டை திராவிடர் கழகம், அம்மாப்பேட்டை பனகல் திராவிடர் கழகம், அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் தமிழ்ச் சங்கம்.

சேலம் ஜில்லா ஆதிதிராவிட சபையின் ஆதரவில் தோழர் ஆர். வரதப்பன் தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் தோழர் பி. ராமசாமி சொற்பொழிவாற்றினார். சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மாகாண மாநாடுகளுக்காக பெங்களூர் தோழர்கள் தலா ரூ. 5 வீதம் நன்கொடை அனுப்பியுள்ளனர். ஆர். ஜயபதி, எஸ். தேவராயன், எஸ். அருணாசலம், பி. எஸ். நாராயணசாமி, சி. கே. வர்க்கி, மரியதாஸ், சிதம்பரம், உலகப் பிள்ளை, கே. பெருமாள், சி. சனிமூர்த்தி.

காரைக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தொண்டர் படையின் அணிவகுப்புப் பயிற்சி 9-9-45 மாலை தோழர் எம். ஹென்றிமாதவன் தலைமையில் நடைபெற்றது. பின்னர் ஒரு தேநீர் விருந்தும், தோழர் ஸ்டான்லி தலைமையில் கமிட்டிக் கூட்டமும் நடைபெற்றன.

கும்பகோணம் ராஜா டாக்கீஸில் 3-9-45 இரவு பெரியார் தலைமையில் திருவாரூர் புத்துலக சீர்திருத்த நாடக சபையாரால் 'வருங்கால வீரன்' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. இதன் கதை தோழர் ஏ. வி. ரமணியராலும், பாட்டுகள் தோழர் ஜி. பி. சாமியாராலும் எழுதப்பட்டவை. நாடகத்தில் சுமார் 3000 மக்கள் குழுமியிருந்தனர். பெரியார் தலைமையுரைக்குப் பின் தோழர் எஸ். கே. சாமி நன்றி கூறினார். இந்நாடக வெற்றியின் நினைவாக "குடிஅரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

காரைக்காலில் 16-9-45-ல் அன்று தளபதி சி. என். ஏ. தலைமையில் நடக்கவிருந்த திராவிடர் கழகத் திறப்பு விழா திருச்சி மாநாடுகட்குப் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர்களால், தோழர் சக்கரின் முயற்சிகொண்டு 9-9-45 அன்று ரம்சான் கொண்டாடப்பட்டது. விருந்துடன், புகைப்படமும் எடுக்கப்பட்டது. தோழர் வைசாத் சொற்பொழிவாற்றினார்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் 12-9-45 மாலை தோழர் குலாம் ரசூல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எம். பி. சுப்ரமணியம், நடேசன், ஒய். எஸ். அருணாசலம் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது.

### மறைவு

நாகப்பட்டினம் மருத்துவ சங்க மாஜி தலைவரும், திராவிடர் கழக நிர்வாக உறுப்பினருமான தோழர் எஸ். வெங்கடசாமி அவர்கள் மகன் தோழர் அருணாசலம் 10-9-45-ல் இயற்கையடைந்ததற்கு நாகை மருத்துவ சங்கத்தார் வருத்தம் தெரிவிக்கிறார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.